

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட அளவில் நடைபெற்று வரும் அரசுத் திட்டங்கள் பொதுமக்களை சென்று சேருகின்ற விதம் குறித்து சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை மூலம் தொடர்ந்து ஆய்வு செய்து வருவதன் தொடர்ச்சியாக செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அமைச்சர் தா.மோ. அன்பரசன், க. செல்வம் எம்பி. ஆகியோர் உள்ளனர்.




திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று அவரை சென்னைப் பல்கலைக்கழக தமிழ்மொழித்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு உரையரங்கத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி. கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஆகியோர் உள்ளனர்.

# மார்த்தாண்டத்தில் உயர்மட்டப் பாலப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

குமரி,செப்.5-

கன்னியாகுமரி மாவட்டம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகு மீனா, முன்னிலையில் மார்த்தாண்டம் உயர் மட்ட பாலத்தின் கீழ் பகுதியை நேற்று (04.09.2024) நேரில் பார்வையிட்டு, செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக புதிதாக சாலைகள் அமைப்பது, பழுதடைந்த சாலைகளை போர்கால அடிப்படையில் சீரமைப்பது உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருவதோடு, மாநில நெடுஞ்சாலைத் துறையின் கீழ் சாலைகளை உறுதிப்படுத்துவது, விரிவுப்படுத்துவது உள்ளிட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

அதன் ஒருபகுதியாக மார்த்தாண்டம் உயர் மட்ட இரும்பு மேம்பாலம் தே.நெ.47ல் கி.மீ.604/314-ல் ஆரம்பித்து கி.மீ.606/705 வரை 2.4 கி.மீ நீளத்திற்கு ரூ.320 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் 07.05.2024 அன்று பாலத்தின் தூண்கள் 101-ற்கும் 102க்கும் இடையில் உள்ள பாலத்தின் ஓடுதளத்தில் கம்பி தெரியும் அளவிற்கு பழுது ஏற்பட்டது. இதனை சரி செய்யும் பொருட்டு தலைமைப் பொறியாளர் (நெ) புலனாய்வு மற்றும் வடிவமைப்பு சென்னை 08.05.2024 அன்று உடனடியாக பார்வையிட்டு அவர்களின் அறிவுரைகளின் அடிப்படையில் நுண்நுட்ப கான்கிரீட் மூலம் 10.05.2024 அன்று தார் சாலை போடப்பட்டு அன்றே சாலை போக்குவரத்துக்கு திறக்கப்பட்டது. இது தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையின் சாதனையாகும்.

மேலும் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு வரும் சாலையில் 12 கி. மீட்டர் தூரம் வண்டி வாகனங்கள் செல்லுவதற்கு ஏதுவாக சாலையை சீரமைத்து தருமாறு அமைச்சர் , சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதனை விரைந்து சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மார்த்தாண்டம் மேம்பாலம் மற்றும் மேம்பாலத்தின் கீழ் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ்குமார் (கிள்ளியூர்), முனைவர். தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர்.செல்வராஜ், தொழில்நுட்ப சிறப்பு அலுவலர் சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர்கள் திருமதி.ஜெயராணி, திருமதி.சாந்தி, தலைமை பொறியாளர் பன்னீர் செல்வம், நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, குழித்துறை நகர் மன்ற தலைவர் ஆசை தம்பி, துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , பால்வளத்துறை அமைச்சர் .த.மனோ தங்கராஜ் தலைமையில், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர்.செல்வராஜ், பொதுப்பணித்துறை அரசு செயலாளர் .மன்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, ஆகியோர் முன்னிலையில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையிலிருந்து விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கான கண்ணாடி இழை தரைத்தள பாலம் அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), .ராஜேஷ்குமார் (கிள்ளியூர்), முனைவர்.தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), உட்பட பலர் உள்ளனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்து வரும் சாதனைகளை இளைஞர்களிடம் எடுத்துக் கூறி

# ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. புதிய உறுப்பினர்களை இணைத்தார்!

திருவள்ளூர், செப்.5-

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் புதிதாக 50,000 இளைஞர்களை உறுப்பினராக சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஆவடி சட்டமன்ற தொகுதி பட்டாபிராம், நெமிலிச்சேரி ஆகிய பகுதிகளில் முதல் கட்டமாக இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது .

பகுதி ஒன்றியச் செயலாளர்கள் பொன்.விஜயன், டி.தேசிங்கு வரவேற்புரையாற்றினார்.

மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி. துர்கா பிரசாத், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர். செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, விஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார் முன்னிலை வகித்தார்கள்.

இதில் முன்னாள் அமைச்சரும் - மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, உறுப்பினர் சேர்க்கை முகாமில் தொடங்கி வைத்து வீடு வீடாகச் சென்று இளைஞர்களை சந்தித்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் செய்த சாதனைகளையும் கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாள்தோறும் செய்து வரும் சாதனைகளை கழக இளைஞரணி செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர்களுக்கு விளையாட்டுத்துறையில் முக்கியத்துவம் தருவதும் எடுத்துக்கூறி புதிய உறுப்பினர்களாக இணைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜ், ஆவடி மாநகர மேயர் உதயகுமார் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஒன்றிய கவுன்சிலர் நெமிலி கே.சுரேஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்செல்வி,

நிர்வாகிகள் பொறியாளர் எம்.மோகன், வி.தியாகராஜன், கலை மா.சேகர், து.சௌந்தர், ப.கந்தன், எம்.குணசேகரன், ஆதிகேசவன், பாபு, ஒ.எஸ்.தாஸ், ராஜாலிங்ம், ஜோன்ஸ், பார்த்தசாரதி, ஐசய்யா, ரவிச்சந்திரன், சுரேஷ், வி.சரத்குமார், டென்னிஸ், கோபி, சதீஷ், நெல்சன், ராபர்ட், ரகு, ஆவடி மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இள.ஸ்ரீதர், முஸ்தாபா அஃப்ரிடி, சதிஷ்குமார், மகா.புவனேஷ், ரங்கநாதன் மகேஷ், ஜி.பிரிவின் குமார், இ.பிரதீப், வாசுகி எட்வின், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## ஒன்றிய கழகச் செயலாளர் சி.ஜெ.சீனிவாசன் தலைமையில்

# பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் சிறப்புரை!

திருவள்ளூர், செப் 05-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன் வரவேற்புரையாற்றினார் மாவட்ட நிர்வாகிகள் ராஜேஸ்வரி ரவீந்திரநாத், ம.கிரண், பொன்.சு. பாரதி, மணிமேகலை மகேந்திரன், ஐயப்பா செங்கையா, முத்து, ஆஞ்சநேயன் சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கினார்கள். இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அவர் பேசியதாவது:

2026-நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் சிறப்பாக பணியாற்றி மீண்டும் கழக தலைவர் அவர்களே முதலமைச்சராக அரியணை ஏற்போம்.

கழக அரசின் சாதனைகளை சுவர் விளம்பரம் படுத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

கழக இளைஞரணி உறுப்பினர்களை ஒவ்வொரு கிளைகளிலும் அதிக அளவில் சேர்த்திட வேண்டும்

நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்

ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களில் அதிக அளவில் கழக கொடிகளை ஏற்ற வேண்டும்

ஒவ்வொரு கிளைக் கழகங்களில் கூட்டங்களை நடத்திட வேண்டும் என தெரிவித்தார் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் பி.டி.சந்திரன், சிஜே.செந்தில் குமார், தலைமைக் கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் டி.எம் சுகுமாரன், முரளிசேனா, இ.கே.உதயசூரியன், டி. ஆர்.தீலீபன், சித்திக் அலி, வெங்கட பெருமாள், தண்டபாணி, ரவி, பத்மநாபன், ஜெகதீசன், கமலநாதன், சுபான், எம்.ஹரி, ஆர்.முரளி, கேசவன், மனோகரன், ஜானகிராமன், புரேந்தர், சாமுண்டீஸ்வரி, முடிவில் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் கலில், சந்திரபாபு, பிரபு ராம்குமார், திவாகர் ஆகியோர் நன்றி கூறினார்கள்.



சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் நேற்று (04.09.2024) பாரிஸில் நடைபெற்று வரும் 2024 பாராலிம்பிக்ஸில் பதக்கம் பெற்ற தமிழ்நாட்டை சேர்ந்த பாரா பாட்மிண்டன் வீராங்கனைகள் துளசிமதி முருகேசன்(வெள்ளி), மணிஷா ராமதாஸ்(வெண்கலம்), நித்யா ஸ்ரீ சிவன்(வெண்கலம்) ஆகியோரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக மேள தாளத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் (விளையாட்டு) திருமதி. எல். சுஜாதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

## புரவலர் பொ.அன்பழகன் - ஜேம்ஸ் தேவதாசன்- க.மு.மாணிக்கம் பங்கேற்பு!

# மும்பை கலைஞர் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் கூட்டம்!

## ம.சேசுராசு - முன்னணியினர் சிறப்புரை!

மும்பை, செப். 5 -

மராத்திய மாநிலம் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகிகள் கூட்டம் தாராவி அசோக்மில் காம்பவுன்ட் அரங்கத்தில் புரவலர் பொ.அன்பழகன், செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன்,பொருளாளர் க.மு. மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனர் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை மும்பையில் சிறப்பாக கொண்டாடுவது என முடிவு எடுக்கப் பட்டது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு:

தன்னிகரில்லா தலைவர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை மராத்திய மாநிலம் மும்பையில் கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் வருகிற நவம்பர் திங்களில் மிகவும் சிறப்பாக நடத்திட இன்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இவ்விழாவில் 500 நபர்களுக்கு மேல் இலவச நல திட்ட உதவிகள் வழங்குவது எனவும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு சிறப்பு சேர்த்திடும் வகையில் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியிடுவது என்றும்,

கலைஞர் புகழை மென்மேலும் பரப்புகின்ற வகையில் கவியரங்கம்,கருத்தரங்கம் நடத்துவது எனவும்,

மும்பையில் கழக வளர்ச்சியில் மும்முரமாக இருந்து செயலாற்றிய கழக முன்னோடிகளை கவுரவப் படுத்தும் வகையில் அவர்களுக்கு கலைஞர் படம் பொறித்த சுவர் கடிகாரங்கள் வழங்கி வேண்டும் எனவும்,

கலைஞர் படம் பொறித்த 2025 ஆண்டுக்கான தினசரி நாள்காட்டி வெளியிடுவது எனவும்

மும்பையில் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்படும் தமிழ் ஆர்வலர்களை அழைத்து சிறப்பு செய்வது எனவும் ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இலவச நலஉதவிகள் வழங்கி பேருரையாற்ற சிவகங்கை மாவட்ட திமுக செயலாளரும், தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை அமைச்சருமான அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களையும்,

அன்றைய தினம் நடைபெறவிருக்கின்ற கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கிற்கு தலைமையேற்று நடத்தித்தர முன்னாள் அமைச்சரும் காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனருமான இலக்கியத் தென்றல் முகவை மு.தென்னவன் அவர்களையும் அழைத்து சிறப்பு சேர்க்க வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இன்நிகழ்வில் நிர்வா கக் குழு உறுப்பினர்கள் ஜான் சாமுவேல்,நீதிதுரை,காரை இரவீந்திரன்,மாறன் ஆரிய சங்காரன், தனுஸ்கோடி, வே.இரவிச்சந்திரன், இரா. ரவிரஜினி, இரா.காந்தி,அ. அலெக்சாண்டர்,

களந்தை சண்முகவேலு, மற்றும் சி.பாண்டியன், பிராங்கிளின்,எம்.ராஜன், தை.ரூசோ,காளிமுத்து, எஸ்.பி.ஆனந்த், ரவிகுணசீலன், வெ.அன்பரசு,மு. இராமநாதன், ஜோயல், தோ.ஸ்டீபன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு சால்வைக்கு பதிலாக கருப்பு சிவப்பு கலர் சட்டை துணி கொடுத்து மரியாதை செய்யப் பட்டது.

நிர்வாகக் குழுவினர்கள் சேர்ந்து புரவலர், தலைவர்,செயலாளர்,பொருளாளர் ஆகியோர்க்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து அனைவராலும் பூக்கள் தூவி மரியாதை செய்யப்பட்டது.

## சைதை கிழக்குப் பகுதி 170 அ வட்ட அவைத் தலைவர்

# எஸ்.கர்ணன் இல்ல மணவிழா!

## கேரளாவில் இன்று நடைபெறுகிறது!

சென்னை,செப்.5-

சைதை கிழக்குப் பகுதி 170 (அ) வட்ட அவைத் தலைவர் எஸ். கர்ணன் - எலிசபத் (எ) லட்சுமி ஆகியோரின் புதல்வன் க.பிரேம் குமார், ஜி.சந்திர போஸ் - சாந்தகுமாரி ஆகியோரின் புதல்வி ச.ஹரிதா பிரகர்த்தி போஸ் ஆகியோரின் திருமண விழா இன்று (5.9.2024) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கேரளா மாநிலம் குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணா கோவில் மண்டபத்தில் நடைபெறுகிறது.



இந்திருமண விழாவில் கழகத்தினர் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.